Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 13 2024

புதன்கிழமை நவம்பர் 13, 2024 | ஒளி: 10 கதிர் 092 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## சேவை இடம்பெறாது

பொதுத் தேர்தலை முன்னிட்டு பரீட்சைகள் திணைக்களத்தின் ஒருநாள் சேவை அடிப்படையில் சான்றிதழ் வழங்கும் பிரிவு மற்றும் சான்றிதழ் வழங்கும் இணையச் சேவை பொதுத் தேர்தல் தினத்தன்று செயல்படாது என அறிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் சான்றிதழ் வழங்கும் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுவதனால் எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை குறித்த சேவைப் பிரிவு இயங்காது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## மசாஜ் நிலையம் சென்றவருக்கு சோதனை



பம்பலபிட்டியிலுள்ள மசாஜ் நிலையத்திற்கு நபரொருவரை அழைத்து, அவரின் வங்கிக் கணக்கிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய் தொகையைப் பணப் பரிமாற்றம் செய்யுமாறு வற்புறுத்திய தம்பதி உட்பட 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி பொலிஸாரின் கூற்றுப்படி, பாதிக்கப்பட்ட நபருக்கு உடல் மசாஜ் செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அவர் வந்தவுடன் சேவை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மசாஜ் நிலையத்தை அடைந்ததும், ஒன்லைன் மூலம் வங்கியிலிருந்து 1 மில்லியன் பணத்தை அனுப்புமாறு குறித்த தம்பதியினர் அவர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளனர். அத்துடன் சந்தேகநபர்கள் குறித்த நபரின் பணப்பையில் இருந்து 15,000 ரூபாய் பணத்தையும் திருடியுள்ளனர்.

குற்றத்திற்குப் பயன்படுத்திய முச்சக்கர வண்டியுடன் பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 44 மற்றும் 54 வயதுடைய தம்பதியினரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை அடுத்து, சம்பவம் தொடர்பில் இரத்மலானை மற்றும் கல்கிசை பிரதேசத்தைச் சேர்ந்த 19 மற்றும் 23 வயதுடைய மேலும் நான்கு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## 18 நாட்களுக்கு விசேட போக்குவரத்து




தற்போதுள்ள பேருந்துகளை செவ்வாய்க்கிழமை (12) முதல் திங்கட்கிழமை(18) வரை இயக்குமாறு அனைத்து இலங்கை போக்குவரத்துச் சபையின் (SLTB) டிப்போக்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பிற்கு உள்ளேயும் வெளியேயும் பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில், தற்போதைய நேர அட்டவணையின்படி பேருந்துகளை இயக்குமாறு அனைத்து மாகாண டிப்போக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பாதுகாப்பு எச்சரிக்கையை

# மீளப் பெறவும்

**அமெரிக்க தூதரகத்திடம் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை**




இலங்கை தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு எச்சரிக்கையை மீளப்பெறுமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்திடம் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கடந்த 23ஆம் திகதி பாதுகாப்பு ஆலோசனையை வழங்கியதுடன், மறு அறிவித்தல் வரை அறுகம்பே பகுதிக்குச் சுற்றுலா மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்கப் பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 06 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகப் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

அறுகம்பே பிரதேசத்தின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்காகப் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தா கிழக்கு மாகாணத்திற்கு ஞாயிற்றுக்கிழமை (10) விஜயம் செய்திருந்தார்.

இதன்போது, தற்போதுள்ள பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் விளக்கமளித்ததாகப் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பெறப்பட்ட முடிவுகளுக்கு அமைய அறுகம்பே உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பாதுகாப்பு செயலாளர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் சுதந்திரத்தில் தலையிடாத வகையில் அவர்களின் பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனப் பாதுகாப்பு செயலாளர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

21/4 தாக்குதல் விவகாரம்

## பிள்ளையானை அழைத்தது CID



முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி ஒளிபரப்பான அந்த காணொளியில் முன்னாள் அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே மற்றும் ஏப்ரல் 21 குண்டு தாரிகளுக்கு இடையே இடம்பெற்றதாகக் கூறப்படும் சந்திப்பு மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பில் தகவல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த காணொளிக்கு செனல் 4 தொலைக்காட்சி ‘ஸ்ரீ லங்கா ஈஸ்டர்ஸ் பொம்பிங் டிஸ்பெஜர்ஸ்’ என பெயரிட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## இயற்கை எரிவாயுவின் விலையில் மாற்றம்

உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை இன்றைய தினம் 2.928 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது

மேலும், உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலையிலும் சற்று அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 68.21 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 71.83 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

## படகில் சென்று வானூர்தியில் திரும்பிவரும் வாக்குப்பெட்டி

**எம்.றொசாந்த்**

நாட்டில் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, யாழ்ப்பாணம்-குறிகாட்டுவான், நெடுந்தீவுக்கு இடையிலான விசேட படகு சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை (14) காலை 06,30 மணி முதல் மாலை 5.30 மணி வரையில் குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு 07 படகு சேவைகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ச்சி P2

## பாம்பன் பாலத்தில் மறியல் போராட்டம்



இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி, விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் ஒருங்கிணைந்து செவ்வாய்க்கிழமை (12) பாம்பன் பாலத்தில் மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரை தமிழக மீனவர்களின் 66 படகுகளை சிறைபிடித்து, 497 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் மீனவர்கள், அந்நாட்டின் வெளிநாட்டு மீன்பிடி தடை சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. இதில் 90 மீனவர்கள் ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டு காலம் வரையிலும் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டு வழங்கப்பட்டு இலங்கை சிறைகளில் தண்டனை கைதிகளாக உள்ளனர்.

தொடர்ச்சி P2

## சுழிபுரம் கூட்டத்தில் குழப்பம்

**நிதர்ஷன் வினோத்**



வட்டுக்கோட்டை - சுழிபுரம் பகுதியில், திங்கட்கிழமை (12) நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரசார கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டிருந்தது.

குறித்த கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உரையாற்றிய பின்னர் கூட்டத்தில் இருந்த சிலர் கேள்விகள் கேட்க முற்பட்டனர். இதன்போது கூட்டத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

தொடர்ச்சி P2

அரசியல் கைதிகளின்

## விடுதலை தொடர்பில் கலந்துரையாடல்



அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்துக்கும் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக ஜனாதிபதி செயலகத்தின் சட்டப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜே.எம்.விஜேபண்டார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ‘அரசியல் கைதிகள்’ என பெரும்பாலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைக் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில், அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஏதாவது வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறதா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த விஜேபண்டார,

தொடர்ச்சி P2

## முறைகேடாக முந்த முயன்ற சாரதி படுகாயம்

**ரஞ்சித் ராஜபக்ஷ**



இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸும், வானொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், வானின் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

கொழும்பு- ஹட்டன் பிரதான வீதியில் ஸ்கேடன் தோட்டப் பகுதியில் செவ்வாய்க்கிழமை (12) பிற்பகல் 2 மணியளவில், இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த சாரதி, வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஹட்டனில் இருந்து கொழும்பு வரையிலும் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸுக்கு எதிர்த் திசையில், கினிகத்ஹேனவில் இருந்து ஹட்டன் நோக்கி அதிவேகத்தில் பயணித்த வேன், முன்பாக பயணித்த ஓட்டோவை, முறைகேடான முறையில் முந்திச்செல்வதற்கு முயன்ற போதே எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியதில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# படகில் சென்று வானூர்தியில் திரும்பிவரும் வாக்குப்பெட்டி

அதேபோன்று நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி காலை 06.45 மணி முதல் மலை 04.30 மணி வரையிலும் படகு சேவைகள் இடம்பெறவுள்ளன என நெடுந்தீவு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

அதேவேளை, நெடுந்தீவுக்கான வாக்கு பெட்டிகளை புதன்கிழமை (13) படகுகள் மூலம் உத்தியோகஸ்தர்கள் எடுத்துச் சென்று, வியாழக்கிழமை (14) வாக்களிப்பு நிறைவு பெற்றதும் விமானப் படையினரின் உலங்கு வானூர்தியில் வாக்கெண்ணும் மத்திய நிலையமான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு எடுத்து வரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாம்பன் பாலத்தில் மறியல் போராட்டம்



இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (10) ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் 16 பேர் சிறைபிடிக்கப்பட்டதும், ராமேஸ்வரத்தில் நடைபெற்ற விசைப்படகு மீனவப் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டத்தில், மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி நவம்பர் 12-ல் பாம்பன் பாலத்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும் என அறிவித்துள்ளனர்.

இந்த போராட்ட அறிவிப்புக்கு நாட்டுப் படகு மீனவ அமைப்புகளும் ஆதரவு அளித்தன. முன்னதாக திங்கட்கிழமை இராமேஸ்வரம் வட்டாச்சியர் அலுவலகத்தில் சாலை மறியல் போராட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தி மீனவப் பிரதிநிதிகளுடன் அரசு அதிகாரிகள் நடத்திய அமைதிக் குழு கூட்டத்தில் உடன்பாடு ஏற்படவில்லை.

இதனால் மீனவர்கள் அறிவித்தபடியே செவ்வாய்க்கிழமை (12) காலை 9.30 மணியளவில் பாம்பன் சாலைப் பாலம் துவங்கும் இடத்தில் மறியல் போராட்டம் துவங்கியது. இந்த சாலை மறியல் போராட்டத்தினால் இராமேஸ்வரம்-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகப் போக்குவரத்து பாதிப்புக்குள்ளானதோடு போராட்டம் ஆரம்பித்த போது மீனவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே லேசான தள்ளு முள்ளும் ஏற்பட்டது.

பாம்பனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மற்றும் சாலை மறியல் போராட்டத்தில் சுமார் ஐந்நூறு மீனவர்களும், பெண்களும் கொண்டனர்.

# 18 நாட்களுக்கு விசேட போக்குவரத்து



அதன்படி, கம்பஹா, களுத்துறை மற்றும் கொழும்பு பிராந்தியங்களில் மேலதிகமாக 70 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், பயணிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் 80 பேருந்துகள் கொழும்பு கோட்டைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த பேருந்துகள் தற்போதுள்ள கால அட்டவணைக்குக் கூடுதலாக இயக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் பணிகளுக்காகப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் வாய்க்குப் பெட்டிகளுக்கு மொத்தம் 1,017 பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், தேர்தல் பணிகளுக்காக 290 பேருந்துகள் அந்தந்த கட்டண அடிப்படையில் பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணிகளுக்கான அதிகாரிகள் மற்றும் பொலிஸாரின் போக்குவரத்து முடிந்ததும், இந்த பேருந்துகள் பொது போக்குவரத்திற்குக் கிடைக்கும்.

நீண்ட வார இறுதி விடுமுறையை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (17) மற்றும் திங்கட்கிழமை (18) கொழும்புக்கான பேருந்து போக்குவரத்துகளைத் திட்டமிடுமாறு அனைத்து மாகாண டிப்போக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# விடுதலை தொடர்பில் கலந்துரையாடல்



அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகள் என்று அழைக்கப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் விசாரணையின்றி கைது செய்யப்பட்ட அல்லது கடுமையான நிலைமைகளின் கீழ் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களாவர்.

இந்தக் கைதிகள் தன்னிச்சையான தடுப்புக் காவல், நீண்டகால சிறைவாசம் மற்றும் நியாயமான விசாரணையின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைக் குழுக்கள், சந்தேக நபர்களின் குடும்பங்கள் மற்றும் ஆர்வலர்கள் நீண்ட காலமாகவே போராடி வருகின்றனர்.

அத்துடன், இது தொடர்பான சட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், அத்தகைய குற்றச்சாட்டுக்களில் உள்ளவர்களுக்கு நியாயமான விசாரணையை உறுதி செய்வதற்கு, ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், அரசியல் கைதிகளில் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடப்படும் என, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, வடக்கில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யுவதியின் கால் மீதேறி பயணித்த தபால் ரயில்

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கிச் சென்ற இரவு தபால் ரயிலில் பயணித்த யுவதி ஒருவர் ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் வைத்து ரயிலில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்துள்ள சம்பவம் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்றுள்ளது.

அரலிய உயன, மாவடிவில, ரத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய பல்கலைக்கழக மாணவியான ரிட்சா சந்தமணி என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் உட்பட 18 பேர், எல்ல பிரதேசத்திற்குச் சுற்றுலா சென்று கொண்டிருந்துள்ளனர்.

காலை 6.30 மணியளவில் ரயில் ஹப்புத்தளை நிலையத்தில் நிறுத்தப்பட்ட போது, ரயிலில் இருந்து இறங்கி மீண்டும் ரயிலில் ஏற முற்பட்ட போது ரயிலில் இருந்து விழுந்துள்ளதுடன் இதன் போது அவருடைய இடது கால் மீது ரயில் பயணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பெண்ணை உடனடியாக தியத்தலாவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# பிள்ளையானை அழைத்தது CID



2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ராஜபக்ஷர்களின் அரசியல் எதிரிகளை இலக்கு வைத்துத் துணை இராணுவ கொலை குழுவின் அங்கத்தவர்களை பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் இணைத்துக் கொண்டுள்ளதாக செனல் 4 தொலைக்காட்சி வெளிப்படுத்தியது.

இந்த காணொளியில் அடங்கும் சர்ச்சைக்குரிய விடயங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகள் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பிலான சமர்ப்பணங்களைக் குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் திங்கட்கிழமை (11) முன்வைத்திருந்தது.

# யாழில் 12 வாக்களிப்பு நிலையங்கள் மாற்றியமைப்பு

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் வாக்களிப்பு நிலையங்களாகச் செயற்பட்ட 12 வாக்களிப்பு நிலையங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் அறிவித்துள்ளார்.

ஊர்காவற்துறை தேர்தல் தொகுதியில் வேலணை மத்திய கல்லூரி விடுதி வாக்களிப்பு நிலையம் சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய நால்வர் மணிமண்டபத்திற்கும் நாரந்தனை தெற்கு பொது நோக்கு மண்டப வாக்களிப்பு நிலையம் நாரந்தனை தெற்கு கிராம சக்தி பொது மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலய மண்டப இல 1 வாக்களிப்பு நிலையம் வடலியடைப்பு சனசமூக நிலையத்திற்கும் அராலி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் அராலி இந்துக் கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் வசாவிளான் மத்திய கல்லூரி மண்டப இல 2 வாக்களிப்பு நிலையம் பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.


மானிப்பாய் தொகுதியில் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல 1 வாக்களிப்பு நிலையம் தாவடி தெற்கு சனசமூக நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

கோப்பாய் தொகுதியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டப இல 2 வாக்களிப்பு நிலையம் அச்சுவேலி ஆரம்ப பாடசாலைக்கும், அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் விக்னேஸ்வரா முன்பள்ளிக்கும் மாற்றப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி தொகுதியில் இமையாணன் மாந்தோட்ட சிவஞான வைரவர் ஆலய மண்டப வாக்களிப்பு நிலையம் உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கும், கரணவாய் சக்கலாவத்தை பொது நோக்கு மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் கொற்றாவத்தை செட்டித்றை சித்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

நல்லூர் தேர்தல் தொகுதியில் கொக்குவில் மேற்கு கிறிஸ்தவாலய தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல 1 இல் இயங்கிய வாக்களிப்பு நிலையம் ஶ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய மண்டபத்திற்கும், நாவலர் கலாச்சார மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் அத்தியடி கணபதி கலாச்சார மண்டபத்திற்கும் மாற்றப்பட்டுள்ளது.

# பியூமியின் வழக்கை துரிதப்படுத்துமாறு கோரிக்கை



பியூமி ஹன்சமாலிக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்குக் கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த வழக்கு நேற்று (11) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது கொழும்பு மேலதிக நீதவான் பண்டார இளங்கசிங்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

உள்நாட்டு வருமான வரி சட்டத்தின் 190ஆவது பிரிவின்படி, பியூமி ஹன்சமாலி மற்றும் அவுரா லங்கா நிறுவனத்தின் தலைவர் விரஞ்சித் தம்புகல ஆகியோருக்கு எதிராக உள்நாட்டு இறைவரி திணைக்களம் சொத்துக் குவிப்பு வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

இந்நிலையில், இவர்களின் வீடுகளைச் சோதனையிட நீதிமன்ற உத்தரவிட்டபோதும், வீட்டில் இருவரும் இருக்கவில்லை என்று உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தினேஷ் பெரேரா தெரிவித்துள்ளார்.

# சுழிபுரம் கூட்டத்தில் குழப்பம்

அங்கு முறுகல் நிலை ஏற்பட்டவேளை அவ்விடத்திற்கு வருகை தந்த பொலிஸார் கேள்வி கேட்டவர்களை வெளியேற்றினர்.

அதன் பின்னர் சுமந்திரனை அழைத்துச் சென்ற ஆதரவாளர்கள் பாதுகாப்பாக அவரை அனுப்பி வைத்தனர்.

# முறைகேடாக முந்த முயன்ற சாரதி படுகாயம்



பஸ்ஸுக்கும், வானுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது எனத்தெரிவித்த ஹட்டன் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 70 ஆண்டுகளில் 2 இலட்சம் பேருக்கு நேர்ந்த கொடூரம்

## பகிரங்க மன்னிப்பு கோரினார் பிரதமர்



சிறுவர்களுக்கான அரசு பராமரிப்பு இல்லங்கள், மனநல மருத்துவமனைகள் உள்ளிட்ட காப்பகங்களில் கடந்த 70 ஆண்டுகளாக சுமார் 2 இலட்சம் பேருக்கு நிகழ்த்தப்பட்ட கொடூரங்களுக்காக நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் பாராளுமன்றத்தில் பகிரங்கமான, வரலாற்றுப்பூர்வமான மன்னிப்பு கோரினார்.

நியூசிலாந்தில் சிறுவர்களுக்கான அரசு பராமரிப்பு இல்லங்களில் ஏராளமான சிறுவர்கள் துன்புறுத்தப்பட்டதாகவும், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு மின்சாரம் பாய்ச்சி கொடுமைப்படுத்தப்பட்டதாகவும், தேவாலயங்களில் இளைஞர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், தாய்மார்களிடம் இருந்து குழந்தைகள் வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்பட்டுத் தத்து கொடுக்கப்பட்டதாகவும் புகார்கள் எழுந்தன. இந்தப் புகார்களின் உண்மைத் தன்மை குறித்த 6 ஆண்டுகால பொது விசாரணையில் பல்வேறு உண்மைகள் வெளிவந்துள்ளன. அவற்றை, நினைத்துப் பார்க்க முடியாத தேசிய பேரழிவு என்று நியூசிலாந்து அரசு குறிப்பிட்டுள்ளது. 1950-களில் இருந்து 70 ஆண்டுகளில் சுமார் 2,00,000 பேர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் அரசு குறிப்பிட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க 233 பரிந்துரைகள் ஏற்கப்பட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்து. அதன் அடிப்படையில், கடந்த 70 ஆண்டுகளில் நிகழ்ந்த இந்த தேசிய பேரழிவுக்காக நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (12) பகிரங்க மன்னிப்பு கோரப்போவதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட ஏராளமானோர் வருகை தந்ததால் பாராளுமன்ற கலரி நிரம்பி வழிந்தது.

கடந்த 70 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் கண்மூடித்தனமாகச் செயல்பட்டதற்காக அனைத்து அரசுகள் சார்பிலும் பகிரங்கமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மன்னிப்பை கோருவதாக பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் தெரிவித்தார்.

# ஆட்பதிவு இயங்காது

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை அன்று ஆட்பதிவு திணைக்களத்தில் பொதுமக்கள் சேவை இடம்பெறாது என்று திணைக்களத்தின் பதில் செயலாளர் நாயகம் சூரியபெரும தெரிவித்துள்ளார்.

# மீலாதுன் நபி விழா

■ வி.ரி.சகாதேவராஜா

கிழக்கில் புகழ் பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் வருடாந்த மீலாதுன் நபி விழா கல்லூரி அதிபர் அருட். சகோதரர் S.E.றெஜினோல்ட் FSC தலைமையில் திங்கட்கிழமை(11) அன்று சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் 125ஆவது ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகத் தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசாரத்துறை தலைவர் பேராசிரியர் எம் .எம். பாசில் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக கல்முனை வலயக்கல்விப் பணிமனையின் கணக்காளர் வை.ஹபீபுள்ளா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அதேவேளை, பிரதான பேச்சாளராக ஏறாவூர் ஐம்மியத்துல் உம்முல் அறபிக் கல்லூரி அதிபர் ஏஎச்எம். சாதிக் மௌலானா கலந்து சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.























# அதிகாரிகள் தீவிர அக்கறை





■ செ.தி.பெருமாள்

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் நிலவும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ்.அபயகோன் தலைமையில் நுவரெலியா மாநகர சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குவதில் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதுடன், அப்பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க வழங்கக்கூடிய குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகள் தொடர்பில் அதிகாரிகள் தீவிர அக்கறை செலுத்தினர்.

மேலும், இதில் மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சமிலா அத்தபத்து, நுவரெலியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வை.பி.விஜேவர்தன, நுவரெலியா மாநகர ஆணையாளர் கே.ஜி.ஐ.டி. பி.விஜயதிலக்க மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் செயலாளர்கள் மற்றும் பாட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# என்.பியில் சங்கத்தின் புதிய தலைவர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் தயாசிவம் கோபி சங்கர் இலங்கை என்.பியில் சங்கத்தின் 2024-2025ஆம் ஆண்டுக்கான தலைவராகப் பதவியேற்றார்.



கோபி சங்கர், யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டதாரியும் ஆவார்.

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து இவ்வாறான ஒரு சங்கத்திற்குத் தலைவராகத் தெரிவு செய்யப்படும் முதலாவது வைத்திய நிபுணர் இவராவார்.

அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச சத்திர சிகிச்சையாளர் சங்கத்தின் இலங்கைக்கான பிரிவின் முதலாவது தலைவராகவும் கோபி சங்கர் செயற்படுகிறார்.

# சீன பெண்கள் இருவர் கண்டியில் கைது

சுற்றுலா விசாவில் தங்கியிருந்து வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்ட சீனப் பெண்கள் இருவர் கண்டி சுற்றுலாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து 47 மற்றும் 48 வயதுடைய குறித்த இரு பெண்களும் கண்டியில் உள்ள பொருளாதார நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருவரிடமும் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கட்டிலுக்குச் சென்ற பெண் வன்புணர்வு

கட்டிலில் படுக்கச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தாயை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய ஒருவரைத் தேடி வருவதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை - அந்தாயம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்றிருந்த இரண்டு பிள்ளைகளின் தாய், வீட்டுக்கு வந்து தூங்குவதற்குத் தயாரான போது, கட்டிலுக்குப் பக்கத்திலேயே மறைந்திருந்த மர்ம நபர், அப்பெண்ணின் வாயைப் பொத்தி, கழுத்தை நெரித்து, அச்சுறுத்தி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

அப்பெண்ணின் கணவன், கொழும்பு பிரதேசத்தில் வேலை செய்து வருகின்றார். தன்னுடைய பிள்ளைகள் இருவருடன், அயலில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்றிருந்த அப்பெண், அன்றிரவு 10 மணியளவில் வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

பின்னர் கட்டிலில் படுக்கச்சென்ற அப்பெண், கட்டிலுக்கு அருகில் உள்ள நாற்காலியில் யாரோ ஒருவர் அமர்ந்திருப்பதை அவதானித்துள்ளார்.

அச்சமடைந்த அந்த பெண், கூச்சலிட முயன்றபோது, பாய்ந்து பிடித்த அந்த நபர், அப்பெண்ணின் வாயைப் பொத்தி, கழுத்தை நெரித்து, சத்தம் போட்டால் கொலை செய்து விடுவேன் என அச்சுறுத்தி, பாலியல் வன்புணர்ந்துள்ளார்.

பக்கத்து அறையில் படுத்திருந்த அவருடைய மகன், ஏதோ விபரீதம் இடம்பெறுவதை அறிந்த தும்புத்தடியை எடுத்துவந்து தாக்குவதற்கு முயன்றபோது, பின்கதவால் அந்த நபர் தப்பியோடி விட்டார். அந்த மர்ம நபர், பூப்புனித நீராட்டு விழாவுக்கு வருகை தந்தவர் என்பது இனங்காணப்பட்டுள்ளது என்று தெரிவித்த மொனராகலை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கிணற்றில் இருந்து சடலம் மீட்பு

■ எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணம் - மயிலங்காடு பகுதியில் தோட்ட கிணற்றிலிருந்து மயிலங்காடு, எழாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய நபர் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை (11) மீட்கப்பட்டுள்ளது.

இவர் வீட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை (09) அன்று புறப்பட்டுச் சென்றுள்ளதுடன், இரண்டு தினங்களாக அவரை காணாத உறவினர்கள் தேடி வந்துள்ளனர். இந்நிலையில், அவரது சடலம் தோட்டக் கிணறில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மது போதையில் கிணற்றுக்கட்டினில் உறங்கியவேளை கிணற்றில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என சந்தேகப்படுகின்றது.

அவரது சடலம் மீதான



மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டுள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# சோயா அறுவடையும் விழிப்பூட்டலும்

■ வி.ரி.சகாதேவராஜா

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள ஏற்பாட்டில் போரதீவுப்பற்று - சங்கர்புரத்தில் முன்மாதிரி துண்டமாக செய்கை பண்ணப்பட்ட சோயா மற்றும் சேதன மரக்கறிகளின் அறுவடையும் புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வும் திங்கட்கிழமை (11) அன்று, றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவிற்குப் பொறுப்பான விவசாய போதனாசிரியர் துஷ்யந்தி ஜதீஸன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, சங்கர்புரத்தின் விவசாயியான வைரமுத்துவுக்கு சோயாவில் 3 வகையான இனங்கள் வழங்கப்பட்டது. மேலும், முன்மாதிரி துண்டமாக அதனைச் சிறப்பாகச் செய்கை பண்ணி அதன் அறுவடையும் சேதன வீட்டுத்தோட்டத்தில் செய்கை பண்ணிய கத்தரி புடோல் அவரை போன்றவற்றின் அறுவடையோடு சூரிய ஒளியில் இயங்கக்கூடிய சோலார் யானை வேலி பயன்படுத்தும் முறை புடோலுக்கு ஏற்படுத்தும் பழ ஈயை கட்டுப்படுத்தும் முறைகள் செய்து காட்டப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் சுகன்யா, நித்தியா நவரூபன் விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# பிள்ளையானுக்கு மற்றுமொரு தலையிடி

■ பேரின்பராஜா சபேஷ்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் செவ்வாய்க்கிழமை (12) நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளினால் தடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற தேர்தல் மட்டக்களப்பு வேட்பாளருமான சிவநேசதுரை சந்திரகாந்தனினால் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு அவரது அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய ரீதியில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா அமைப்பு மாவட்ட உதவி தேர்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் தேர்தல் பிணக்குகள் தீர்க்கும் பிரிவுக்குச் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளினால் ஊடகவியலாளர் சந்திப்பு தடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் திங்கட்கிழமை (11) நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ள நிலையில், தேர்தல்கள் சட்டங்களுக்கு முரணான வகையில் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



# அமைதியான நேரத்தில் சரியாக எடைபோடுவதே சிறந்தது

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு 2024 நவம்பர் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறவிருக்கிறது. அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இந்நிலையில், தேர்தலுக்கான பரப்புரைகள், திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்து மௌனகாலம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

செப்டெம்பர் 14ஆம் திகதியன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலும் அதற்கான பிரசாரக் கூட்டங்களும் எவ்விதமான வன்முறைகளும் இன்றி, மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்றன. பொதுத் தேர்தலுக்கான பரப்புரையின் போது, இரண்டொரு சம்பவங்களைத் தவிர, மிக சுமுகமாகவே நிறைவடைந்துள்ளன. இதனை, தேர்தல் நிறைவடையும் வரையிலும் காட்டிக்காக்கவேண்டும்.

நியாயமான முறையில் பணிகளை மேற்கொள்ளும் வகையில் தேர்தல் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மக்கள் சிந்திக்க ஒரு இடத்தை கொடுக்க வேண்டும். அனைத்துத் தரப்பினரும் தமது புனிதத்தன்மையை பறைசாற்றிக் முடித்து விட்டனர். இது வாக்காளர்களுக்கான காலமாகும்.

பரப்புரைகள் தொடர்ந்து தலையை நிரப்பும் போது, சிந்தனை முழுவதும் மரத்துப் போகிறது. இப்படிச் செய்தால், மனம் மரத்துப்போன எண்ணத்திலிருந்து விடுபட்டு வாக்குச் சாவடிக்குச் செல்ல சுமார் இரண்டு நாட்கள் ஓய்வு தேவை. பொதுமக்கள் தரப்பில் இருந்து வரும் இந்த அமைதியான காலம் அதற்கு முக்கியமானது. அதையும் மீறி சிலர் மௌனமாக இருந்தாலும் சமூக வலைத்தளங்கள் மூலம் பழைய முட்டாள்தனத்தையே தொடர்ந்து உமிழ்கின்றனர்

சில பதிவுகள், உள்ளூரில் இருந்து பதிவேற்றம் செய்யப்படாததால் சட்ட நடவடிக்கை எடுப்பதும் சிரமமாக உள்ளது. சிலர் விபிஎன்( VPN) ஐ மாற்றி இடுகைகளைப் பதிவேற்றுகிறார்கள். குறுஞ்செய்திகள் போன்றவையும் அவ்வாறே அனுப்பப்படுகின்றன. இதெல்லாம் சட்டத்துக்குள் பிடிப்பது கடினம்.

நவம்பர் 11ஆம் திகதி இரவு 11.11 மணிக்கு உலகம் முழுவதும் மௌனம் கடைப்பிடிக்கப்படுகிறது. முதல் உலகப் போருக்கான போர் நிறுத்தம் 1918 நவம்பர் 11, அன்று நடைமுறைக்கு வந்ததால், உலகின் பெரும்பாலான நாடுகளில் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த பொதுத் தேர்தலுக்காக அரசாங்கம் 1,100 கோடி ரூபாய் செலவை ஏற்றுள்ளது. நாட்டின் ஜனநாயகத்திற்காக இந்தச் சுமையை நாம் சுமக்க வேண்டும். ஜனநாயகத்துக்கு வாக்குரிமை அசைக்க முடியாத வாய்ப்பாகும். இப்படிச் செலவு செய்து, வாக்களிக்காவிடின் வாக்கெடுப்பு நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை, அந்தச் செலவு அர்த்தமற்றது.

வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஐந்து வருட காலத்திற்குப் பிரதிநிதி நியமிக்கப்படுகிறார். ஐந்தாண்டுகளில் ஒரு பேச்சு இல்லாமல் அவர் எங்கள் கருத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவார் என்று நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. நாமும் விரைவாக மாறுவதால், நம் மாற்றத்தைப் பார்த்து அந்தத் தன்மைக்கு மாற முடியாது. இதனாலேயே ஒரு கொள்கையுடைய மனிதனை மட்டும் அனுப்ப முடியும்.

இந்த அமைதியான நேரத்தில் நாம் செய்ய வேண்டியது யாரை அனுப்புவது என்பதைச் சரியாக எடைபோடுவதுதான். இந்த நாட்டின் தலைவிதியின் முடிவு குறுக்கும் நெடுக்குமாக உள்ளதால், கொள்கைப் பார்வையை முதலில் கருத்தில் கொள்ளவேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# வித்தியாசமானதோர் தேர்தல்



எம்.எஸ்.எம்.ஐயூப்

நாளை இலங்கையில் நாடளாவிய ரீதியில் பாராளுமன்றத் தேர்தலொன்று நடைபெறவிருக்கிறது என்று கூற முடியுமா? அவ்வாறு கூறுவது சற்று கஷ்டமாக இருக்கிறது. ஏனெனில், முன்னைய பொதுத் தேர்தல் காலங்களில் காணப்பட்ட பல காட்சிகள் இம்முறை காண்பதற்கில்லை.

இதற்கு முன்னர் பொதுத் தேர்தல்கள் நடைபெறும் போது, சகல பிரதேசங்களிலும் மதில்கள் மரங்கள் சுவர்களில் நூற்றுக்கணக்கான வேட்பாளர்களின் படங்களுடன் பல்லாயிரக் கணக்கான சுவரொட்டிகள் காணப்பட்டன. இம்முறை அவை அந்தளவு காண்பதற்கில்லை.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்ட பிரதான வேட்பாளர்கள் நாடெங்கிலும் பாரிய பொதுக் கூட்டங்களை நடத்தினர். எனினும், தற்போதைய பொதுத் தேர்தலின் போது அவ்வாறான ஓரிரு கூட்டங்களே நடைபெற்றன. அவையும் எந்த நாளும் எல்லா இடங்களிலும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

பிரதான கட்சிகள் என்று கருதக்கூடிய பல கட்சிகளும் இம்முறை மைதானங்கள் போன்ற இடங்களில் கூட்டங்களை நடத்தாது சிறிய அறைகள் மற்றும் பல்வேறு உள்ளரங்குகளிலேயே கூட்டங்களை நடத்தின. அவையும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் போல், ஒவ்வொரு நாளும் நடைபெறுவதில்லை.

இம்முறை தேர்தலில் 8,000க்கு அதிகமான வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ள போதிலும், ஆயிரத்துக்கும் குறைவானவர்களே பிரசாரப் பணிகளில் ஈடுபட்டதாக பெஃப்ரல் (PAFFREL) என பொதுவாக அழைக்கப்படும் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல்களுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டிஆரச்சி கூறியிருந்தார்.

அரசியல் கட்சிகளிடையே மட்டுமல்லாது பொது மக்களிடையேயும் தேர்தலைப் பற்றி அக்கறை மிகவும் குறைவாகவே இருப்பதாக ஹெட்டிஆரச்சி கூறினார்.

தேர்தல் காலத்தில் தற்காலிக அலுவலகங்களை வைத்திருக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு போட்டியிடும் கட்சிகளுக்கும் சுயேச்சை குழுக்களுக்கும் அனுமதி வழங்குகிறது. அதற்காக அக்கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் அனுமதி பெற வேண்டும்.

இம்முறை ஆணைக்குழு சுமார் ஆறு இலட்சம் தற்காலிக அலுவலகங்களுக்கு அனுமதி வழங்கியிருந்தது என்றும் ஆனால், ஆயிரத்துக்கும் குறைவான அலுவலகங்களே திறக்கப்பட்டு இருந்ததாகவும் ஹெட்டிஆரச்சி கூறுகிறார்.

பொதுவாகத் தேர்தல் காலத்தில் போட்டியிடும் கட்சிகளினதும் சுயேச்சை குழுக்களினதும் ஆதரவாளர்கள் வீடு வீடாகச் சென்று, தமது வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் கேட்டுக்கொள்வார்கள். இம்முறை ஒரு சில கட்சிகள் மட்டும் அதுவும் கூலிக்கு ஆட்களை அமர்த்தி தமது பிரசார துண்டு பிரசுரங்களை வீடு வீடாக விநியோகித்தன.

இம்முறை ஊடகங்களிலும் இதற்கு முன்னரைப் போல் தேர்தல் பிரசார அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) நள்ளிரவோடு முடிவடைந்த பிரசார காலத்தின் இறுதி நாட்களிலேயே வேட்பாளர்களுடனான சில நேர்காணல்களும் வேட்பாளர்களின் விளம்பரங்களும் பிரசுரிக்கப்பட்டு இருந்தன.

வழமைக்கு மாறாகத் தொலைக்காட்சிகளிலும் தேர்தல் தொடர்பான விவாதங்கள் குறைவாகவே இம்முறை ஒளிபரப்பப்பட்டன. தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் இந்த நிலைமைக்குப் பல காரணங்களைச் சுட்டிக் காட்டுகின்றன.

அடுத்தடுத்து இரண்டு தேசிய மட்ட தேர்தல்களுக்குச் செலவழிக்கக் கட்சிகளிடமும் வேட்பாளர்களிடமும் பண பலம் இல்லாமையே இதற்குக் காரணம் என்று ‘பப்ரல்’ அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டிஆரச்சி கூறியிருந்தார். அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். கடந்த வருடம் தேர்தல் செலவு விதிமுறை சட்டம் நிறைவேற்றப்படும் வரை அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தமக்கு வேண்டியவாறு தேர்தல் பிரசார பணிகளுக்குப் பணம் செலவழிக்க முடிந்தது.

ஆனால், இச்சட்டம் அந்த செலவுக்கு உச்ச வரம்பொன்றை விதிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறது. இதன் காரணமாகவும் சில கட்சிகளும் வேட்பாளர்களும் பிரசாரப் பணிகளைக் குறைத்துக்கொண்டு இருக்கலாம் என்றும் ஹெட்டிஆரச்சி வாதிடுகிறார்.

அவற்றை விட, ஜனாதிபதித் தேர்தலொன்றில் ஒரு கட்சி மட்டுமே வெற்றி பெறும் அந்தக் கட்சியைத் தவிர, ஏனைய சகல கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த நிலையில், அவற்றில் பல கட்சிகள் தமது எதிர்காலத்தைப் பற்றி நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதுவும் பொதுத் தேர்தலைப் பற்றிய அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் ஆர்வமின்மைக்கு ஏதுவாக அமைந்திருக்கலாம்.

கட்சி அலுவலகங்கள் மற்றும் கூட்டங்கள் இடம்பெறும் இடங்கள் போன்ற அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர, ஏனைய இடங்களில் சுவரொட்டிகளையும் பதாகைகளையும் காட்சிப்படுத்துவதும் வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதற்குச் சமமான விருந்துபசாரம் போன்றவற்றை நடத்துவதும் தேர்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் இச்சட்டங்கள் கடுமையாக அமுலாக்கப்படவில்லை.

இம்முறை இச்சட்டம் கடுமையாக அமுலாக்கப்பட்டன. உதாரணமாக ஒரு புறத்தில் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் அல்லது கூலித் தொழிலாளர்கள் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டு போகும்போது, அவர்களுக்குப் பின்னால் பொலிஸார் அச்சுவரொட்டிகளைக் கழற்றிக் கொண்டு போவதை இம்முறை காணக்கூடியதாக இருந்தது. பல இடங்களில் தேர்தல் அதிகாரிகளும் பொலிஸாரும் வேட்பாளர்களால் வாக்காளர்களுக்கென சமைக்கப்பட்ட உணவு வகைகளை அவற்றைச் சமைத்த பாத்திரங்களுடன் கைப்பற்றி எடுத்துச் சென்றிருந்தனர்.

சுவரொட்டிகள், பதாகைகள், கொடிகள் தேர்தல் சின்னங்கள் பொறிக்கப்பட்ட பிரசுரங்கள் ஆகியவையினால் ஏற்படும் பிரச்சினைகள் பல தசாப்தங்களுக்கு முன்னரும் அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. 1960 வரை இவை தடைசெய்யப்படவில்லை. ஆனால், அவற்றினால் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே பல்வேறு பிணக்குகளும் மோதல்களும் இடம்பெறவே அவ்வாண்டு அவை தடைசெய்யப்பட்டன.

1962 தேர்தல் சட்டங்கள் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுலொன்றும் இந்த விடயத்தை விரிவாக ஆராய்ந்தது.

பொதுவாக இவற்றால் நன்மையைப் பார்க்கிலும் தீமையே ஏற்படுகிறது என்பது அக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரினதும் கருத்தாகியது. குறிப்பாக பொது மக்களிடையே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கு இத்தடை உதவுகிறது என்பதில் அக்குழுவினரிடையே உடன்பாடு இருந்தது. எனவே, அத்தடை அதன் பின்னரும் தொடரப்பட்டது. ஆனால், சட்டத்தை மதிக்காத ஆட்சியாளர்கள் நாட்டை ஆட்சி புரிந்த காலங்களில் பொலிஸாராலோ தேர்தல் அதிகாரிகளாலோ அச்சட்டத்தை அமுலாக்க முடியவில்லை.

தேர்தல்களின்போது, பொது மக்கள் எவ்வித புறநிலை காரணிகளின் தாக்கங்களுமின்றி சுயமாகச் சிந்தித்து தாம் எதற்காக எந்தக் கட்சிக்கு எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப் போகிறேன் என்பதை முடிவு செய்யவேண்டும் என்பதைச் சகலரும் ஏற்றுக் கொள்வர். ஆயினும், அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் இதற்கு பொது மக்களுக்கு இடமளிப்பதில்லை. ஒரு வகையில், அரசியல்வாதிகளினதும் அரசியல் கட்சிகளினதும் பிரசாரங்களால் வாக்காளர்கள் தேர்தல் களத்தைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொள்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. அந்த அறிவு அவசியமாகிறது.

ஆயினும், அவர்கள் மூலம் உண்மையான தகவல்கள் மட்டுமே வாக்காளர்களைச் சென்றடைவதில்லை. அவர்கள் தம்மைப் பற்றியும் தமது போட்டியாளர்களைப் பற்றியும் உண்மையைப் பார்க்கிலும் பொய்யையே பரப்பி வருகிறார்கள். இந்த பல்லாயிரக் கணக்கான பொய்த் தகவல்களுக்குள் மூழ்கியே வாக்காளர்கள் தமது எதிர்காலத்துக்குப் பொருத்தமான ஆட்சியாளர்களைக் கண்டுபிடித்து வாக்களிக்க வெண்டியுள்ளது.

எனவே, தேர்தல் களத்தில் ஏற்பட்டிருக்கும் மந்த நிலையில் நன்மை தீமை இரண்டும் இருக்கின்றன.

இங்குள்ள எழும் முக்கியமானதோர் கேள்வி என்னவென்றால், தேர்தல் களத்தில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த மந்த நிலை காரணமாக வாக்களிப்பில் மக்களின் பங்களிப்பு குறையுமா என்பதேயாகும். சட்டப்படி பார்த்தால் வாக்குப் பதிவு எவ்வளவு குறைந்தாலும் தேர்தல் சட்டப்படி செல்லுபடியாகும்.

1988 ஜனாதிபதித் தேர்தலின் போது, தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சியின காரணமாகவும் வடக்கில் புலிகளுக்கும் ஆயுதப் படையினருக்கும் இடையிலான போரின் காரணமாகவும் மக்கள் வாக்களிக்கச் செல்லத் தயங்கினர். சுமார் 50 வீத வாக்குப் பதிவே அந்த வருடம் இடம்பெற்றது. அந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணசிங்க பிரேமதாசவே வெற்றி பெற்றார். அவர் செல்லுபடியான வாக்குகளில் 50.43 வீதத்தையே பெற்றார். அதாவது பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்குகளில் சுமார் 25 வீத வாக்குகளைப் பெற்றே அவர் ஜனாதிபதியானார். இது உண்மையான மக்கள் ஆணையை பிரதிபலிக்கிறதா என்ற கேள்வி அப்போது எழுப்பப்பட்டது. எனவே, இம்முறை பொதுத் தேர்தலிலும் 70 வீத வாக்குப் பதிவாவது இடம்பெறுவது முக்கியமாகும்.

தேர்தல்கள் ஜனநாயகத்தின் அடிக்கற்களாகும். அவை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெற வேண்டும்.

அதேவேளை, அவை போதியளவு மக்கள் பங்களிப்போடு நடைபெற வேண்டும்.

இதுவரை நாட்டில் நடைபெற்ற 16 பொதுத் தேர்தல்களில் நான்கில் மட்டுமே 70 வீதத்துக்குக் குறைந்த வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளது. எனவே, தான் இம்முறை குறைந்தபட்சம் 70 வீதமாவது வாக்குப் பதிவு இடம்பெற வேண்டும் என்கிறோம்.



## வாழ்வியல் தரிசனம்

பிரபஞ்சத்தின் ஊடாக, உயிர்கள் உருவாகின. எங்கள் புலன்களுக்குத் தெரியாத, மகா சக்தியான இறைவனால் இவை உருவாகின. இதைப் படைப்பு என்கின்றோம்.

எனவே, உயிரினங்களைப் படைத்த இறைவனுக்கே, அவற்றைக் காத்து அருளும் உரிமையும் உண்டு. எனவே, கடவுள் எங்களைக் காப்பாற்றி, உன்னதமான நிலைக்கு இட்டுவிடுவார் என நம்பிக்கை கொள்வோமாக!

கடவுளை வழிபாடு செய்யும் மக்கள் மனக்கிலேசம் அடையலாகாது. அவரைப்போல, இரக்கம் கொண்டவரும் மன்னிப்பை அருள்பவரும் எவர் உளர்? இறைவனின் மன்னிப்பை எடைபோட, நாம் யார்?

தெய்வம் மனிதரைப்போல இல்லை. மகாசக்தியை உள்ளன்புடன் பக்திமூலம் வெளிப்படுத்தினால், புத்துணர்வு கிடைத்தே தீரும். அநேகர் கடவுளுடன் பேரம் பேசுவது போல் நடப்பார்கள்.

எங்களுக்கு வேண்டியதைத் தாருங்கள்; நாங்கள் தரும காரியங்களை அப்போது செய்வோம் என்று சிலர் பேசுவார்கள். சாமானியர்களைப் போல் பேரம் பேசலாகாது.

பக்திக்கு ஏது எல்லை?உயிர்களை நேசித்தாலே போதும். நிம்மதி தானாகச் சுரக்கும். உண்மையாக வாழ்ந்தாலே எல்லாம் கிட்டும்.

நன்றி– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாதையை பாருங்கள்



நுவரெலியா - போபத்தலாவ, மெனிக்பாம் தேசிய கால்நடை பண்ணை அக்கரப்பத்தனை நகரத்திலிருந்து 9 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

இக்கிராமத்திற்குச் செல்லும் 9 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாதையில் ஐந்து கிலோ மீற்றர் தூரம் மாத்திரம் அரசாங்கத்தால் புனரமைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.


கிராமத்திற்கு முறையான போக்குவரத்து சேவையும். இடம்பெறுவதில்லை. ஒரே ஒரு அரச பேருந்து மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

பாதையை அபிவிருத்தி செய்யாத காரணத்தினால் பேருந்து சேவையும் அடிக்கடி இடை நிறுத்தப்படுவதாக இங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.


இங்கு வாழும் மக்களுக்கு நோய்கள் மற்றும் விபத்துக்கள் ஏற்பட்டாலும் கூட, வாகனங்களில் கொண்டு செல்ல முடியாத அளவுக்கு இப்பாதை காணப்படுகிறது.

குறித்த பாதையிலே உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்திப் புனரமைப்பு செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– துவாரகஷான்



# சமூக ஊடகங்களும் பாடசாலை மாணவர்களும்



வில்விரித்தப்பு பிரசாத்,
2ஆம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



இன்றைய அறிவியல் உலகம் தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களின் மூலம் மிக உன்னதமான பின்னிப்பிணைப்பை உலக மக்களிடையே எளிமையாக்கி விட்டது.

அத்துடன், தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மானிட நாகரிகத்தையும் வாழ்க்கை முறையையும் மாற்றி அமைத்து விட்டன.

பண்டைய காலத்தில் தகவலை பரிமாற்று கொள்வதற்கு புகை, பறையொலி, புறா மூலம் தூது அனுப்புதல் என்பன ஆரம்பகால ஊடகங்களாக (Primitive Media) காணப்பட்டன. அதன்பின்னர் கலைகள், ஓவியம், சிற்பம் வழியான பாரம்பரிய அல்லது மரபார்ந்த ஊடகங்களை (Traditional Media) பயன்படுத்தினர். அதனைத் தொடர்ந்து கடிதங்கள், தொலைபேசி முதலிய தனி ஊடகங்கள் (Personal Media) என்பவற்றைப் பயன்படுத்தினார்.

கடிதங்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற வெகுசன ஊடகங்களை (Mass Media) பயன்படுத்தினர். அதன் பின்னர் இணையம் போன்ற புதிய ஊடகங்கள் (New Media) என ஊடகங்கள் பல்வேறு வகையாகின்றன.

சமூகம் என்பது “ஒருவருடன் ஒருவர் கலந்து, இணைந்து எல்லோருக்கும் பொதுவான சில நோக்கங்களை அடைவதற்காகக் கூடிச் செயல்படும் மனிதர்களின் கூட்டே ஆகும்” என கிட்டிங்ஸ் (Giddings) கூறுகின்றார். அவருடைய கருத்துக்கிணங்க மக்கள் ஒரு சமூகத் தொழில்நுட்ப கட்டமைப்புக்குள் இணைந்து வாழ சமூக ஊடகங்கள் துணை புரிகின்றன.

இன்றைய நவீன உலகில் சமூக ஊடகங்களில் செல்வாக்கும் தாக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சமூக ஊடகத்தினை பயன்படுத்தாத நபர்களை விரல் விட்டு எண்ணிப் பார்க்கும் அளவிற்கு சமூக ஊடகங்களின் வளர்ச்சி நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது. சமூக ஊடகம் (Social Media) என்பது இணையத்திற்கான ஊடகத்தைப் பயன்படுத்தி, மனிதர்களுக்கு இடையில் தகவல்களைப் பகிர்தல், உரையாடுதல், கருத்துப் பரிமாற்றம் என சமூக உறவுகளை உருவாக்கும் ஒரு தளமாகும். இந்த சமூக ஊடகங்கள் இணையதளங்கள் மற்றும் செயலிகளாகக் காணப்படுகின்றன. முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), படவரி (Instagram), வலையொளி (You tube), கீச்சகம் (Twitter), பற்றியம் (Messenger) போன்றவற்றை சமூக ஊடகங்களுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில், பாடசாலை மாணவர்களில் பெரும்பான்மையானோர் அதிகமாக facebook, Tik Tok, WhatsApp போன்ற செயலிகளைப் பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக ஆய்வுகளின் படி, 13 தொடக்கம் 18 வயது இடைப்பட்ட வயது பிரிவினரே அதிகமாக சமூக ஊடகங்களின் பயன்பாட்டிற்கு அடிமையாகிக் காணப்படுகிறது.

அண்மைக்கால தரவுகளின் படி 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பாடசாலை மாணவர்களில் 60 வீதம் தொடக்கம் 80 வீதம் வரையான மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர்.

சமூக ஊடகங்கள் மாணவர்களின் கற்றலுக்கு உறுதுணையாக இருக்கின்றது. அதேநேரம், பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும் உந்துதல் காரணியாகவும் உள்ளன. நாணயத்தின் இரு பக்கம் போல சாதகமான காரணிகளும் பாதகமான காரணிகளும் காணப்படுகிறன.

அந்த வகையில், சமூக ஊடகங்களின் மூலம் பாடசாலை மாணவர்கள் பல சாதகமான விடயங்களை பெற்றுக் கொள்கின்றனர்.

Google, ChatGBT போன்ற செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligent AI) மூலம் மாணவர்களுக்கு புதிய விடயங்களையும் தெரியாத விடயங்களையும் அறிந்து கொள்வதற்கு இவை துணை புரிகின்றன.

youtube, Twitter, Linkedin போன்ற செயல்கள் மூலம் மாணவர்கள் கற்றல் சார்ந்த விடயங்களை காணொளிகள் மூலம் நேரடியாக கற்பதற்குரிய வாய்ப்புகள் கிடைக்கின்றன.

மாணவர்கள், தங்களின் ஆர்வமான துறைகளில் சமூக ஊடகங்களை பயன்படுத்தி புதிய வழிமுறைகளையும் பயிற்சிகளையும் கற்றுக்கொள்ள முடிகின்றது. உதாரணமாக கலை சார்ந்த விடயங்கள், செய்முறை பயிற்சிகள் சார்ந்தவற்றை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள சமூக ஊடகங்கள் மாணவர்களுக்கு உதவியாக இருக்கின்றன. சமூக ஊடகங்கள் உலகெங்கும் இடம்பெறுகின்ற சம்பவங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும் மாணவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தவும், சமுதாய மற்றும் நாகரிக மாற்றங்களை கண்டு கொள்ளவும் சமூக ஊடகங்கள் வழி சமைக்கின்றன. ஊடகங்கள் மூலமாக பாடசாலை மாணவர்கள் புதிய உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் உதவி புரிகின்றது. குறிப்பாக புதிய தொடர்புகள் மூலம் ஏனைய மொழிகள் மீதான பரீச்சயமும், அவர்களுடைய கலாசார விழுமியங்களையும் அவர்களின் எண்ணங்களையும் புரிந்து கொள்ள உதவுகின்றன.

சமூக ஊடகங்கள் பாடசாலை மாணவர்களுக்கு நன்மையான புதிய விடயங்களை பரிமாற்றினாலும், அவை சில பாதகமான தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன.

அந்த வகையில், சமூக ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துவதன் மூலம் கல்வி கற்பதற்கான நேரம் வீணடிக்கப்படுகின்றது. நகைச்சுவை வீடியோக்கள் மற்றும் புகைப்படம் எடுப்பதற்கு அதிகளவு நேரம் செலவிடுவதால் கற்றலில் ஆர்வமின்மைக்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு தொடர்ந்து சமூக ஊடகங்களை பயன்படுத்துவதனால் கண் தொடர்பான பிரச்சினைகள் மாணவர்களுக்கு ஏற்படுகின்றது.

மடிக்கணினி, கணினி போன்றவற்றை பயன்படுத்தும் போது தொடர்ந்து ஒரே இடத்தில் அமர்ந்திருப்பதனால் உடல் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்ற வாய்ப்புகளும் உள்ளன.


சமூக ஊடகங்களில் குறிப்பாக facebook ,Tik Tok போன்ற செயலிகளில் மாணவர்களின் புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளை பதிவிடுவதன் மூலம் அவர்களுடைய புகைப்படங்கள் திருடப்பட்டு தவறான முறையில் பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இதனால் அவர்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்ற சம்பவங்களும் நிகழ்வதை இன்றைய காலகட்டத்தில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

சமூக ஊடகங்களில் மாணவர்கள் தவறான காணொளிகளை பார்த்துவிட்டு அவர்களும் தவறான வழியில் தள்ளப்படுகின்ற சூழலையும் சமூக ஊடகங்கள் ஏற்படுத்துகின்றன.

ஆபாச காணொளிகள் மற்றும் தற்கொலை சார்ந்த காணொளிகளை பார்த்தது தானும் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முற்படுகின்ற நிலையையும் சமூக ஊடகங்கள் ஏற்படுத்துகின்றன. குறிப்பாக வீடியோ Games இற்கு தற்காலத்தில் மாணவர்கள் அடிமையாகி தற்கொலை செய்து கொண்ட சம்பவங்களும் இலங்கையில் அதிகமாக காணப்படுகின்றன. சமூக ஊடகங்களை சாதகமாக பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியாக தம்மை வலுப்படுத்தி கற்றல் மற்றும் சமூகத் தொடர்புகளை விரிவாக்கிக் கொள்ளலாம். ஆனால், அவற்றின் பாதகமான பக்க விளைவுகளை குறைப்பதற்கு மாணவர்களுக்கு பொறுப்பான முறையில் சமூக ஊடக பாதுகாப்பு சார்ந்த (Cyber Crime) விடயங்களையும் தெரியப்படுத்தி இவற்றை பயன்படுத்துவதால் ஏற்படுகின்ற விளைவுகளையும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு விழிப்புணர்வு செய்து அவர்களை முறையான விதத்தில் ஊக்குவிப்பது தற்காலத்தில் அவசியமான ஒன்றாகும்.

ஆகவே மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை பாதுகாப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.





# ‘எக்ஸ்பிளைண்டு’ முதல் ‘பீரியட்’ வரை

திரையரங்கத்துக்குச் சென்று திரைப்படம் பார்த்த காலம் மாறி ஓ.டி.டியில் எப்போது திரைப்படங்கள் வெளியாகும் எனக் காத்திருக்கிற காலம் இது. 2020ஆம் ஆண்டுக்குப் பிறகு ‘ஓ.டி.டி.’ என்பது இணையத்தில் பரலாகப் பயன்படுத்தப்படும் வார்த்தையாக மாறிவிட்டது. கடந்த சில ஆண்டுகளிலேயே திரைப்படங்கள், ஆவணப்படங்கள், கல்வி சார்ந்த படங்கள் ஆகியவை வெவ்வேறு ‘ஓ.டி.டி.’ தளங்களில் வெளியாகின, இனியும் வெளியாக இருக்கின்றன. இப்படி மாணவர்களுக்குப் பயன் தரக்கூடிய, கல்வி சார்ந்த சுவாரசியமான ‘ஓ.டி.டி.’ இல் வெளியான தொடர்கள் சில

l ‘அவர் பிளானட்’ (Our Planet): உலகளாவிய இயற்கை நிதியம் (Worldwide fund for nature), பிரபல ஓ.டி.டி. தளமான ‘நெட்பிளிக்ஸுடன்’ இணைந்து ‘அவர் பிளானட்’ எனும் ஆவணப்படத்தைத் தயாரித்துள்ளது. காலநிலை மாற்றத்தால் காட்டுயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், புவி அடையும் மாற்றங்கள் குறித்தும் இந்த ஆவணப்படத்தில் பேசப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இப்படத்துக்கான காட்சிகளைப் படம்பிடித்துள்ளார் இயக்குநர் டேவிட் அட்டன்பரோ.

2019ஆம் ஆண்டு வெளியான முதல் சீசனில் 8 படங்களும், 2023இல் வெளியான இரண்டாவது சீசனில் 4 படங்களும் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு படமும் குறைந்தது 45 நிமிடங்களுக்குப் படமாக்கப்பட்டுள்ளது. காடுகளுக்கே கூட்டிச்சென்றது போன்ற தத்ரூபமான காணொளிகள், தெளிவான விளக்கங்கள் ஆவணப்படத்தைச் சுவாரசியமாக வைத்திருக்கின்றன. சுற்றுச்சூழல், காட்டுயிர் சார்ந்து இயங்க விருப்பமுள்ள மாணவர்களும், இப்பிரிவுகளின்கீழ் தகவல்களைத் தேடிப் படிக்கும் ஆர்வம் உள்ளவர்களும் தவறவிடக்கூடாத ஆவணப்படம் இது.

l ‘எக்ஸ்பிளைண்டு’ (Explained): பெயருக்கு ஏற்ப பாப் கலாச்சாரம் முதல் பங்குச் சந்தை வரை 44 தலைப்புகளின் கீழ், தகவல்களைச் சேகரித்துத் தொகுக்கப்பட்டுள்ள ஆவணப்படம். எந்தவொரு தலைப்பானாலும் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் கில்லாடியான பிரபல ‘வாக்ஸ்’ தயாரிப்பு நிறுவனத்தின் படைப்பாக இது உருவாகியுள்ளது. 2018ஆம் ஆண்டு ‘நெட்பிளிக்ஸ்’ தளத்தில் வெளியான முதல் சீசனோடு சேர்த்து மொத்தம் மூன்று சீசன்கள் வெளியாகியுள்ளன.




உதாரணத்துக்கு, ‘கோடிங்’ எனும் ஆவணப்படத்தை எடுத்துக்கொண்டால், ‘கோடிங்’ உருவான வரலாறு முதல் சம்பந்தப்பட்ட துறையின் சமீபத்திய அப்டேட் வரை குறிப்பிட்டு விளக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்துறை சார்ந்து நடக்கப்போவது என்ன என்கிற தகவலும் சேர்த்துச் சொல்லப்படுகிறது. 20-25 நிமிடங்களில் ஒரு தலைப்பைப் பற்றிய அனைத்து முக்கியத் தகவல்களையும் தெரிந்துகொள்ள முடியும். பொது அறிவுப் பாடத்தில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த ஆவணப்படம். இப்படமும் ‘நெட்பிளிக்ஸ்’ தளத்தில்தான் இடம்பெற்றுள்ளது.

l ‘அப்ஸ்டிராக்ட்’ (Abstract): கடந்த சில ஆண்டுகளில் அதிக வேலைவாய்ப்பை வழங்கும் ஒரு துறையாக வரைகலை வடிவமைப்பு வளர்ச்சி கண்டுள்ளது. இணையப் புரட்சியால் இது தொடர்பான ‘டிசைன்’ துறை பல பரிமாணங்களை எட்டியுள்ளது எனலாம். ஒன்லைனிலும் ஆஃப்லைனிலும் ‘டிசைன்’ இல்லாத இடமே இல்லை எனும் அளவிற்கு எல்லாம் ‘டிசைன்’ மயமாகிட்டது. உலகெங்கிலும் உள்ள இத்துறையைச் சேர்ந்த நிபுணர்கள் ஒன்றிணைந்து ‘அப்ஸ்டிராக்ட்’ எனும் இந்த ஆவணப்படத்தை எடுத்துள்ளனர்.

கட்டிடவியல், காலணி தயாரிப்பில் ‘டிசைன்’, அரங்க அமைப்பு, ஒளிப்படக்கலை, ஆடை வடிவமைப்பு, டிஜிட்டலில் ‘டிசைன்’ என இத்துறையின் அனைத்து அம்சங்களையும் அலசியிருக்கிறார்கள். இத்துறையில் ஈடுபட இருப்போருக்கான ஒரு தகவல் களஞ்சியம் இந்த ஆவணப்படம். ‘நெட்பிளிக்ஸ்’ தளத்தில் இப்படத்தைக் காணலாம்.

l பீரியட் - எண்ட் ஆஃப் தி சென்டன்ஸ் (Period - End of the sentence): 2019ஆம் ஆண்டுக்கான ஒஸ்கர் விருது பெற்ற ‘பீரியட் - எண்ட் ஆஃப் தி சென்டன்ஸ்’ ஆவணக் குறும்படத்தை ‘நெட்பிளிக்ஸ்’ தளத்தில் பார்க்கலாம். குறைந்த விலையில் நாப்கின் தயாரித்த கோவையைச் சேர்ந்த சமூக ஆர்வலர் அருணாசலம் முருகானந்தத்தின் கதையைத் தழுவி எடுக்கப்பட்ட படம் இது.

மாதவிடாய் குறித்து இந்தியக் கிராமங்களில் நிலவும் மூடநம்பிக்கைகளை மையமாக வைத்து இப்படத்தை இயக்கியுள்ளார் ராய்க்கா ஸெட்டாப்ச்சி. இன்றும் இந்தியாவின் பல கிராமங்களில் பெண்கள் நாப்கின் பயன்படுத்துவதற்கான சூழல் அமையாமல் உள்ளது. மாதவிடாய் நாள்களில் தனிமைப்படுத்தப்படும் பழக்கமும் ஒழியவில்லை. இது போன்று பெண்கள் சந்திக்கும் மாதவிடாய்ப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கிறது இந்த ஆவணப்படம்.

l ‘சேஸிங் கோரல்’ (Chasing Coral): உலகெங்கிலும் இருந்து தேர்ந்த நீர்மூழ்கி வீரர்கள், அறிவியலாளர்கள், ஒளிப்படக் கலைஞர்கள் சேர்ந்து கடலுக்கு அடியில் சென்று ஆவணப்படம் ஒன்றைக் காட்சிப்படுத்தியுள்ளனர். கடலுக்கு அடியில் உள்ள பவளத்திட்டுகள் ஏன் மறைகின்றன என்கிற கேள்விக்கு விடை தேடிச் செல்லும் பயணமாக இந்த ஆவணப்படம் அமைந்துள்ளது.

2014ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 75% பவளத்திட்டுகள் மறைந்ததாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. காலநிலை மாற்றத்தின் பாதிப்பால் ஏற்படக்கூடிய இந்த விளைவு, 2050ஆம் ஆண்டில் இன்னும் மோசமடையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையைக் குறித்துத் துறைசார் நிபுணர்களின் கருத்துகளும், ஆவணப்படத்தின் காணொளியும் கடலுக்கு அடியில் இருக்கும் உலகைக் கண் முன் கொண்டுவருகிறது.










# குருதிக் கொடை

மட்டக்களப்பு-மண்முனை,தென் எருவில்பற்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின், ஏற்பாட்டில் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் இரத்ததான நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் 7ஆவது தடவையாக நடைபெற்றது.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைகளின் இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வானது திங்கட்கிழமை (11) காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் இடம்பெற்றது.

விளையாட்டு கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், என இருநூறுக்கும் அதிகமானோர் இவ் உன்னதமான நிகழ்வில் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர்.

- வ.சக்தி









# சாதனை

பிரித்தானியாவில் உள்ள வைஸ்ட்மினிஸ்டர் (West Minister) பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞான கற்கை நெறியில், அப்துல் ஹக்கம் என்ற மாணவன் முதல் தரத்தில் சித்தியடைந்துள்ளார். தனது க.பொ.த. உயர்தர பரீட்சையை இரண்டு வருடங்களுக்கு முன்னதாக 16 வயதில் சிறந்த பெறுபேறுகளுடன் முடித்த இவர், தனது 21ஆவது வயதில் பட்டப்படிப்பை முடித்துள்ளார்.

தற்போது ஹக்கம் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) தொடர்பான நிறுவனம் ஒன்றில் வேலை பெற்று, அந்தத் துறைசார் பொறியியலாளராக்க் கடமை ஏற்றுள்ளார். இவர், கல்ஹின்னையைச் சேர்ந்த சிரேஷ்ட பட்டயக் கணக்கறிஞர் எஸ்.ஏ.அஸீஸ் மற்றும் சித்தி பரீதா ஆகியோரின் அன்பு புதல்வராவார்.

- எம்.எஸ்.எம்.ஸாகிர்





# சிறுவர் சந்தை

மட்டக்களப்பு-மத்தி கல்வி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள புதிய காத்தான்குடி பிர்தௌஸ் வித்தியாலயத்தின் சிறுவர் சந்தை, பாடசாலை வளாகத்தில் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் றபீக்கா உவைஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

- எம்.எஸ்.எம்.நூர்தீன்









# மாணவர் விடுகை விழா

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் 45ஆவது வருடாந்த க. பொ. த உயர்தரப் பிரிவு மாணவர்களின் விடுகை விழா திங்கட்கிழமை (11) அன்று மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஐ.உபைதுல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கல்முனை மாநகர ஆணையாளரும் கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளருமான என்.எம். நௌபீஸ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். அத்துடன், மருதமுனை மஸ்ஜிந் நூர் பள்ளிவாசல் தலைவர் எம்.ஐ.எம்.முகர்ரப் கௌரவ அதிதியாகவும் திறைசேரியின் பிரதிப் பணிப்பாளர் ரி.எம்.றிஹான் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டதுடன், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் எம்.ஐ.எம்.வலீத் உட்பட பிரதி அதிபர் மற்றும் உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, கல்வி மற்றும் புறக்கிருத்திய செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்கள் பலர் அதிதிகளினால் பதக்கம் அணிவித்தும் சான்றிதழ் வழங்கியும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் கவிதை, பாடல், நடனம், நாடகம் உட்பட கலை, கலாசார நிகழ்ச்சிகள் பலவும் மாணவர்களினால் அரங்கேற்றப்பட்டதுடன் விழா நினைவாகச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் முதற் பிரதி கல்முனை மாநகர ஆணையாளருக்கு வழங்கி வைக்கப்பட்டது.

- அஸ்லம் எஸ்.மௌலானா












# சேவை நலன் பாராட்டு விழா





கல்முனை பொது நூலகத்தில் 30 ஆண்டுகள் நூலக உதவியாளராகக் கடமையாற்றி தங்கேஸ்வரி சுகிர்தனுக்கு, நூலக ஊழியர்கள் ஒழுங்கு செய்திருந்த சேவை நலன் பாராட்டு விழா செவ்வாய்க்கிழமை (12) நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நூலகர் ஏ.எல்.எம்.முஸ்தாக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நற்பிட்டிமுனை நூலகர் எஸ்.எம்.ஆர்.அமினுதீன் உட்பட கல்முனை மாநகர சபையின் கீழ், இயங்கும் கல்முனை, மருதமுனை, சாய்ந்தமருது மற்றும் நற்பட்டிமுனை பொது நூலகங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ரி.சுகிர்தனின் 30 வருட கால உன்னத சேவைகள் பற்றி புகழாரம் சூட்டி பாராட்டுரைகள் இடம்பெற்றதுடன், நினைவுச் சின்னங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

- அஸ்லம் எஸ்.மௌலானா





# மண்டையோடு எங்கே?



ஜேர்மன் இயக்குநர் முர்னா, கார்ல் மேயர் எழுதிய, 'தி லாஸ்ட் லாஃப்' எனும் திரைப்படத்தை 1924ஆம் ஆண்டு எடுத்தார். கதையைப் படமாக்கியபோது கதாபாத்திரங்களின் பார்வையில் எல்லாவற்றையும் பார்ப்பது போல கேமரா மூலமாக எல்லாவற்றையும் படம் பிடித்தார். அதாவது, கதாபாத்திரங்களின் உள்ளுணர்வை வெளிப்படுத்தும் பாணியைப் பின்பற்றினார்.

அதுமட்டுமல்லாமல், படக்காட்சிகளை ஒரு சங்கிலித் தொடர்போலப் படம் பிடிக்கும் உத்தியைப் பின்பற்றினார். இது அந்தக் காலத்தில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. இவற்றுக்குக் கிடைத்த அங்கீகாரம் முர்னாவுக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. இந்தப் படம் அன்றைய காலகட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவந்த, எக்ஸிஃபிசனிஸ்ட் கொள்கைக்கு முற்றிலும் மாறான வகையில் படமாக்கப்பட்டது. இது முர்னாவின் பிற திரைப்படங்களில் இருந்து மாறுபட்ட வகையிலும் இருந்தது என்றே கூறலாம்.

கடைசி ஜேர்மன் படம்: இதற்குப் பிறகு மீண்டும் வித்தியாசமான படம் ஒன்றை எடுத்தார். அந்தப் படத்தின் பெயர் 'ஃபவுஸ்ட்'. 1926இல் வெளிவந்த அந்தப் படம் பாரம்பரிய கோத்திய பாணியும், பண்டைக்கால 'ஃபவுஸ்ட்' உடைய கதையும் சேர்ந்த வித்தியாசமான கலவையாக இருந்தது. இந்த முயற்சி நல்ல வரவேற்பைப் பெற்ற போதிலும் முர்னாவின் கடைசி ஜேர்மன் படமாக அது அமைந்து விட்டது.

## ஹொலிவூட்டில் என்ட்ரி:

1926இல் ஹொலிவூட்டில் களமிறங்கினார் முர்னா. முர்னாவின் படைப்புகளையும் கதைப் பாணியையும் நன்கறிந்த பிரபல ஹொலிவூட் படத் தயாரிப்பு நிறுவனமான ஃபாக்ஸ் ஸ்டுடியோ அவரைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டது.

## தேடி வந்த விருதுகள்:

அந்த நிறுவனத்தின் சார்பாக 'சன்ரைஸ்: எ சாங் ஆஃப் டு ஹியூமன்ஸ்' எனும் திரைப்படத்தை 1927இல் இயக்கி வெளியிட்டார். தொழில்நுட்ப ரீதியாகச் சிறந்த படைப்பாக இந்தப் படம் கருதப்பட்டாலும் வர்த்தக ரீதியாகப் பெரிய வசூலை எட்டவில்லை. இருப்பினும், முதன் முதலில் ஹொலிவூட் விருது வழங்கும் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டபோது இந்தப் படம் பல விருதுகளைத் தட்டிச் சென்றது. திரைப்படம் வியாபார ரீதியாக வெற்றி பெறவில்லை என்றாலும் முர்னாவுக்கு நிதிப் பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை.

## தோல்வியைத் தழுவிய படங்கள்:

அந்தக் காலத்தில் இசை மற்றும் ஒலி அமைப்பு சார்ந்த தொழில்நுட்பங்கள் சினிமாத் துறையில் புதிய புரட்சியை உருவாக்கிக் கொண்டிருந்தன. அதனால், அந்தத் தொழில் மாற்றங்களைத் தனது திரைப்படங்களில் பயன்படுத்திக்கொள்ள முர்னா முயன்றார். அதன் அடிப்படையில், 'ஃபோர் டெவில்ஸ்' (1928), 'சிட்டி கேர்ள்' (1930) ஆகிய இரு படங்களை இசை மற்றும் ஒலி அமைப்புகளைச் சேர்த்து முழுப் படமாக வெளியிட்டார். ஆனால், அந்த இரு படங்களுமே தோல்வியைத் தழுவின. இந்தத் தோல்விகள் முர்னாவின் மனதில் பாதிப்பை ஏற்படுத்தின. அதனால், ஃபாக்ஸ் ஸ்டுடியோவை விட்டு விலகினார்.

## முறிந்த நட்பு:

அந்தச் சமயத்தில் பிரபல ஆவணப் பட இயக்குநர் ராபர்ட் ஜெ. ஃபிளாஹெர்டியின் நட்பு கிடைத்தது. இருவரும் கூட்டாகச் சேர்ந்து சில படங்களை எடுக்கத் திட்டமிட்டனர். அதன் அடிப்படையில், 'டபு' (1931) எனும் படத்தை எடுக்க முடிவெடுத்தனர். படப்பிடிப்பின்போது, ஃபிளாஹெர்டிக்கும் முர்னாவுக்கும் கருத்து வேறுபாடுகள் முளைத்தன. இதனால், ஃபிளாஹெர்டி கூட்டு முயற்சியில் இருந்தும் படப்பிடிப்பில் இருந்தும் விலகினார். எனவே, முர்னா, அந்தப் படத்தைச் சுயமாக எவருடைய உதவியுமின்றி முடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்தப் படம், அமெரிக்க சென்சார்ஸ் அமைப்பின் சான்றிதழுக்காகத் திரையிடப்பட்டது. படத்தில் சில காட்சிகள் ஆபாசமாக இருப்பதாக சென்சார் குழுவினர் தெரிவித்து, அவற்றை அகற்ற உத்தரவிட்டனர்.

## உயிரைப் பறித்த விபத்து:

1931இல் அப்படம் திரையிட முடிவு செய்யப்பட்ட நிலையில், துரதிர்ஷ்டம் முர்னாவைத் தாக்கியது. கார் விபத்து ஒன்றில் அவர் சிக்கினார். அதில் பலத்த காயமடைந்த அவர், உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால், தலையில் காயம் பலமாக இருந்ததால், மருத்துவர்களால் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

## விரும்பியபடி கல்லறை:

அவர் விருப்பப்படியே, ஜேர்மன் நாட்டின் தலைநகரான பெர்லின் நகருக்கு அருகே உள்ள ஸ்டான்டார்ப் எனும் இடத்தில் அவரது உடல் புதைக்கப்பட்டது. சினிமாத் தொழில்நுட்பம் அவ்வளவாக வளராத நிலையில் சில புதுமையான, புரட்சிகரமான தொழில்நுட்பங்களைக் கையாண்டு சினிமா உலகில் தனக்கெனத் தனி இடத்தைப் பிடித்து, ஒரு சகாப்தத்தை ஏற்படுத்திய முர்னா, அந்தக் கல்லறையில் துயில் கொண்டார்.

ஆனால், கல்லறையில் அவரை அமைதியாகத் தூங்க விடவில்லை சிலர். கல்லறையில் இருந்து அவரது உடலைத் தோண்டி எடுத்துக் கடத்திச் செல்ல பலமுறை முயற்சி நடந்திருக்கிறது. இறுதியில், அவரது தலையை மட்டும் துண்டித்து எடுத்துச் சென்றுவிட்டனர் என்று அவரைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டிருந்த ஸ்டீபனி பப்பாஸ் என்கிற அறிவியல் ஆய்வாளர் கூறிய தகவலின் அடிப்படையில், வொஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டிருந்தது.

அவரது கல்லறையில் இருந்து அவரது மண்டையோடு துண்டித்து எடுத்துச் செல்லப்பட்ட பிறகு, அவரது கல்லறையில் மெழுகுவத்தி ஒன்று எரிந்துகொண்டிருந்ததாம். 'நிச்சயமாக இது சூனியக்காரர்களின் வேலைதான்' என்று ஒரு சாராரும், 'இல்லை இல்லை... தலையைத் திருடிய கொள்ளைக்காரர்கள், சவத்தை வாங்க விரும்புவார்களிடம் அதை விற்றிருக்கலாம்' என்று இன்னொரு தரப்பினரும் கூறுகின்றனர். கடைசிவரை மர்மம் விலகவில்லை.

(நன்றி தி இந்து)





# கடமையும் நமக்கே உண்டு



கோபாலகிருஷ்ணன் யாழினிப்ரியா,
ஊடக கற்கைகள்,
யாழ்.பல்கலைக்கழகம்.

டெங்கு காய்ச்சல் மக்கள் வாழ்வில் ஒரு பெரும் சவாலாக உள்ளது. குறிப்பாக மழைக்காலங்களில் கொசுக்களால் ஏற்படும் இந்நோயின் விளைவுகளைக் கட்டுப்படுத்த, அனைவரும் சுத்தம் மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

2024ஆம் ஆண்டில் உலகம் உலகம் முழுவதும் டெங்குகாய்ச்சல் மிகவும் அதிகரித்துள்ளது. ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான காலகட்டத்தில் 1.2 கோடி சந்தேக நிலை டெங்கு அடையாளங்கள் பதிவாகியுள்ளன, இது கடந்தாண்டுடன் ஒப்பிடும்போது, 209% அதிகமாகும்.

குறிப்பாக, அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் டெங்கு தொற்றின் அதிர்வெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அமெரிக்காவில் மட்டுமே ஏப்ரல் 2024இல் 7.6 மில்லியனுக்கும் அதிகமான சந்தேக நிலை தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன, அவற்றில் காலநிலைத் தேற்றங்கள், மழைச் சூழல், வெப்பநிலை அதிகரிப்பு போன்றவை முக்கியமானவை. அதேபோல், சர்வதேச சுற்றுலாப் பயணங்கள் மூலம் தொற்று வேகமாகப் பரவியுள்ளது. இதனால், பல்வேறு நாடுகள் இந்த தொற்றுக்குப் பயனுள்ள தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், நோய்களை மதிப்பீடு செய்வதற்காக, உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகளாவிய கண்காணிப்பு அமைப்பை உருவாக்கி, ஒவ்வொரு மாதமும் நாடுகளிலிருந்து தகவல்களைத் திரட்டுகிறது. தொடர்ந்துப் பல்வேறு நாடுகளில் இந்த நோய்க்கு எதிராகக் கற்றல் நடவடிக்கைகள் மற்றும் மருத்துவ வசதிகள் அதிகரிக்கப்படுகின்றன.

டெங்கு (Dengue) என்பது எட்ஸிப் (Aedes) வகை கொசுக்களால் பரவும் வைரஸ் நோயாகும். இதற்குக் காரணமாகும் வைரஸ் 'டெங்கு வைரஸ்' என்று அழைக்கப்படுகிறது. டெங்கு நோய் குறிப்பாக மழைக் காலங்களில் பரவும் தன்மை கொண்டது, ஏனெனில், அதே சமயத்தில் கொசுக்கள் அதிகளவில் இனப்பெருக்கம் அடைகின்றன.

பொதுவாக இரு அல்லது மூன்று நாட்கள் வரை 104°F வரை உயரக்கூடிய காய்ச்சல் ஏற்படும். பலர் கடுமையான தலைவலி அனுபவிப்பார்கள். அத்துடன், முதுகு, கைகள், கால்கள் உள்ளிட்ட தசைகளில் கடுமையான வலி ஏற்படும். கண்களில் வலி அல்லது அழுத்தம் போன்ற உணர்வு. சில நேரங்களில் சருமத்தில் சிரங்கு, மற்றும் தழும்புகள் போன்றவை தோன்றலாம்.

## டெங்கு நோயின் வகைகள்

1, குறைந்தது அல்லது சாதாரண டெங்கு காய்ச்சல் - இங்கு காய்ச்சல் மற்றும் வியாதி அறிகுறிகள் இருந்தாலும், இதிலிருந்து மீள்வது சுலபமாக இருக்கும்.

2. டெங்கு ஹெமராஜிக் காய்ச்சல் (DHF) - இது உடல் இரத்தம் வடிகால், ரத்தசோர்வு ஏற்படுத்தும் கடுமையான நிலை. குறிப்பாக இரத்த நாளங்களில் அழுத்தம் அதிகரிப்பதால், இது ஆபத்தான நிலையாக மாறும்.

3. டெங்கு ஷாக் சிண்ட்ரோம் (DSS) - இதில் இரத்த அழுத்தம் மிகக் குறைவாக குறைந்து, நோயாளியின் வாழ்க்கைக்கு ஆபத்தான நிலையாக மாறும்.

டெங்கு நோய்க்கு வலுவான நிவாரண மருந்துகள் இன்னும் இல்லை. அதேவேளை, உடல் நீர் அளவை பராமரித்தல், நோயாளியின் உணவு, நீர் ஆகியவற்றை அதிகரித்தல் போன்றவை முக்கியமான சிகிச்சை முறைகளாக உள்ளன.

## டெங்குவை தடுக்க சில வழிமுறைகள்:

வீட்டின் சுற்றுப்புறத்தில் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும், கொசு கடிக்காதவாறு முழு கை மற்றும் காலணிகளுடன் உடை அணிதல்,கொசு மறைவு வலைகளைப் பயன்படுத்துதல்,வீட்டின் பக்கத்தில் சீரான நீர் முட்டை நிரப்பல்கள் ஏற்படுத்தும் இடங்களைத் தடுக்குதல்.

டெங்கு வைரஸ் குறிப்பாகத் தாய்லாந்து, இந்தியா, பிலிப்பைன்ஸ், இலங்கை போன்ற பகுதிகளில் இது முக்கிய சுகாதார பிரச்சனையாகும். எட்ஸிப் கொசுக்கள், குறிப்பாக *Aedes aegypti* மற்றும் *Aedes albopictus* வகைகள், இந்த வைரஸை பரப்பும் பிரதான கொசுக்கள். இந்த கொசுக்கள் பொதுவாகப் பகலில் அடிக்கடி கொட்டுகின்றன, குறிப்பாக அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் அதிகமாகச் செயல்படுகின்றன.

கொசு கடிதல் - வைரஸ் சுமந்த கொசு மனிதனைக் கடிக்கும்போது, வைரஸ் அவரது இரத்தத்தில் சேர்ந்து தொற்றுகிறது. மீண்டும் கொசு கடிதல் - தொற்றியவரை மற்றொரு கொசு கடிக்கும்போது அந்த கொசு வைரஸை எடுத்துக்கொண்டு மற்ற மனிதர்களுக்குப் பரப்புகிறது.

அறிகுறிகள் இல்லாத நிலை - சிலருக்குத் தொற்று ஏற்பட்டாலும், எந்தவிதமான அறிகுறிகளும் தெரியாது, அவர்கள் வைரஸ் தொற்றியவர்கள் என்பதை அறிந்துகொள்ள முடியாது. அழகிய அறிகுறிகளுடன் - சிலர் இயல்பு நிலைக்கு மாற்றி அறிகுறிகளுடன் நோய்த் தொற்றால் பாதிக்கப்படுவர், இது சில நாட்களில் சரியாகும்.

அவசர நிலைமைகள் - சில நேரங்களில் டெங்கு ஹெமராஜிக் காய்ச்சல் மற்றும் டெங்கு ஷாக் சிண்ட்ரோம் போன்ற அவசர நிலைகள் ஏற்படலாம்.

சமீபகாலங்களில் டெங்கு தடுப்பூசிகள் மற்றும் மருந்து கண்டுபிடிப்புகள் பல முனைவுகளாக உள்ளன. Dengvaxia என்ற தடுப்பூசி சில நாடுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது, ஆனால் இது ஒரு வரையறுக்கப்பட்ட அளவிற்குள் மட்டுமே பயன்படுகிறது. இதனால் டெங்கு நோயின் பரவல் கட்டுப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளது.

மூலிகை மருந்துகள் மற்றும் சித்த மருத்துவ முறைகளில் கொசு கடிக்கு எதிரான பல வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் சில பாரம்பரிய மருத்துவ முறைகளாக இருந்தாலும், பரிந்துரைக்கப்பட்ட அறிவியல் சான்றுகளுடன் பயன்படுத்தப்பட்டால், எளிய முறையில் டெங்கு நோயை கட்டுப்படுத்தலாம்.

டெங்கு நோய் ஒரு பொதுவான கொசு பரவும் வைரஸ் நோயாக இருந்தாலும், மக்களின் ஒத்துழைப்புடன் இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் இதனைத் தடுக்க முடியும். டெங்கு நோய் வராமல் தடுப்பதற்கான சில முக்கியமான முறைகளைக் கீழே விளக்கப்படுகின்றன. இதன் மூலம் கொசுக்களின் இனப்பெருக்கத்தையும், கொசுக்களின் கடியால் ஏற்படும் தொற்றுகளையும் தடுக்க முடியும்.

தண்ணீர் தேங்காமல் இருப்பது, தண்ணீர் தேங்கும் இடங்களில் கொசுக்கள் இனப்பெருக்கம் அடையும். எனவே, தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள கழிவு நீர் குழாய்கள், மழை நீர் சேகரிக்கும் தொட்டிகள், பழைய டயர்கள், உடைந்த பாத்திரங்கள் போன்ற இடங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்கச் செய்ய வேண்டும். செடிகள் வைக்கும் பாத்திரங்கள், பிளாஸ்டிக் பாட்டில்கள் போன்றவற்றில் தண்ணீர் தேங்காமல் வைத்திருக்க வேண்டும்.

கொசு மறைவு வலையம் மற்றும் கொசு விரட்டிகள் பயன்படுத்துதல், வீட்டில் ஜன்னல்கள் மற்றும் கதவுகளில் நெடுந்தகை கொசு மறைவு வலையம் பொருத்தலாம். மின்காந்த கொசு விரட்டிகள் அல்லது நறுமணக் கொசு விரட்டிகளைப் பயன்படுத்தலாம். குறிப்பாக உறங்கும்போது, கொசு வலையம் பயன்படுத்துதல் பாதுகாப்பான முறையாகும்.

தனி நபர் பாதுகாப்பு நடவடிக்கைகள் முழு கை உடைகள் மற்றும் முழங்கால் உடைகள் அணிதல். இதனால் கொசுக்கள் சர்மத்தைப் பாயாது. வெளியில் போகும் பொழுது, கொசு விரட்டும் திரவ அல்லது க்ரீம் பயன்படுத்தலாம். அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் கொசுக்கள் அதிகமாகக் காணப்படுவதால், இந்த காலங்களில் அதிகமான பாதுகாப்பு எடுக்க வேண்டும்.

சுத்தமான சூழலை நிலைநாட்டுதல். வீட்டின் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். கழிவுகள், குப்பைகள் போன்றவை நீக்கி சுத்தம் செய்வது முக்கியம். பொதுமக்கள் கூடும் இடங்களில், பள்ளிகள் மற்றும் அலுவலகங்களில் சுத்தம் மற்றும் விழிப்புணர்வு பரப்பப்பட வேண்டும்.

சமூக விழிப்புணர்வு பிரசாரங்கள், பாடசாலைகள், வேலை இடங்கள் மற்றும் பொது இடங்களில் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி, தடுப்பு முறைகள் பற்றிய அறிவுறுத்தல்களை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அனைவரும் தங்கள் வீட்டின் சுற்றுப் புறத்தைச் சுத்தமாக வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து செயல்பட வேண்டும்.

சுகாதார மேலாண்மை அரசு மற்றும் சுகாதாரத் துறை சார்பில் கொசுக்களைக் கட்டுப்படுத்தும் செயல்முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மழைக் காலங்களில் குறிப்பாகத் தண்ணீர் சேகரிப்பு பகுதிகளில் இரசாயனங்கள் கொண்டு கொசு மருந்துகளைத் தெளித்தல். மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் சுகாதாரத்துறை நடத்தும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அனைவரும் இணைந்து செயல்படுதல். இந்த முறைகளைப் பின்பற்றினால் டெங்கு நோய் வராமல் தடுப்பதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

டெங்கு போன்ற நோய்களைத் தடுப்பது நமது கைகளிலேயே இருக்கிறது. இந்த நோய்களின் பரவல் முறைகளைக் கவனமாகக் கவனித்தால், அதைத் தடுக்க சில எளிய முறைகளை நாம் செயல்படுத்தலாம். நமது சுகாதாரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும், பிறருக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்கும் கடமையும் நமக்கே உண்டு.

நாம் செயல்படும் சிறு நடவடிக்கைகள் கூட பலரின் உயிரைக் காக்க உதவும். நமது விழிப்புணர்வும் ஒற்றுமையும்தான் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நமக்கு வழிகாட்டும்.

ரஷ்யா

ட்ரம்ப் – புட்டின் கலந்துரையாடல்

# மறுக்கும் ரஷ்யா



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் பேசியதாக வெளியான செய்தியை மறுத்துள்ள ரஷ்ய ஜனாதிபதி மாளிகை, இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் கண்டித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடன் ட்ரம்ப் தொலைபேசியில் உரையாடியதாகவும், இந்த உரையாடலின்போது, உக்ரைன் போரை மேலும் தீவிரப்படுத்த வேண்டாம் என அவர் வலியுறுத்தியதாகவும் தகவல் வெளியானது.

புளோரிடாவில் உள்ள லாகோ எஸ்டேட்டில் இருந்து ட்ரம்ப், தொலைபேசியில் தொடர்பு கொண்டு புட்டினிடம் பேசியதாக, அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன.


இந்நிலையில், இந்தச் செய்திகளை மறுத்துள்ள ரஷ்ய ஜனாதிபதி மாளிகையின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், “இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது கற்பனையான ஒன்று. இந்த தகவல் தவறானது” என்று தெரிவித்துள்ளார்.

மேலும், டொனால்ட் ட்ரம்ப்பைத் தொடர்பு கொள்வதற்கான உடனடி திட்டங்கள் எதுவும் தங்கள் ஜனாதிபதி புட்டினுக்கு இல்லை என்றும் அவர் விளக்கமளித்துள்ளார்.

மொரிஷியஸ்

மொரிஷியஸ் நாட்டின்

## புதிய பிரதமர் தெரிவு



மொரிஷியஸ் நாட்டின் புதிய பிரதமராக நவீன் ராம்கூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


இந்நாட்டில், சனிக்கிழமை (10), பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதன்போது, பாராளுமன்றத்தில் மொத்தமுள்ள 70 உறுப்பினர்களில் 62 பேர் தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

வாக்குப்பதிவு நிறைவுபெற்ற நிலையில், கடந்த 2 முறை நடைபெற்ற பொதுத்தேர்தல்களிலும் வெற்றிபெற்ற பிரதமர் பிரவீந்த் குமார் ஜுக்நாத் தலைமையிலான ஆயுதப்படை சமூகவுடைமை இயக்கம் (எம்.எம்.எம்.), இம்முறை பெரும்பான்மை இடங்களில் தோல்வியை தழுவியது. பிரதான எதிர்க்கட்சியான முன்னாள் பிரதமர் டாக்டர் நவீன் ராம்கூலம் தலைமையிலான தொழிலாளர் கட்சியான பார்டி டிராவைலிஸ்ட் (பி.டி.ஆர்) மற்றும் மொரீஷியன் ஆயுதப்படை இயக்கம் (எம்.எம்.எம்.), நோவியாவ் ஜனநாயகத்தினர் ஆகிய கட்சிகளின் கூட்டணி இம்முறை வெற்றி பெற்று ஆட்சியமைத்துள்ளது.

அமெரிக்கா

தேசிய பாதுகாப்பு ஆலோசகராக

## சீன விமர்சகர் நியமனம்



அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக, மைக் வால்ட்ஸை நியமிக்க டொனால்ட் ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான மைக் வால்ட்ஸ், அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான பென்டகனில் ஆப்கானிஸ்தானுக்கான பாதுகாப்பு கொள்கை ஆலோசகராக பணியாற்றியுள்ளார். அத்துடன், ட்ரம்ப்பின் தீவிர ஆதரவாளரும் ஆவார்.

மேலும் இவர், தீவிர சீன விமர்சகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மணிப்பூர்

மணிப்பூரில் பதற்றம்

## ஊரடங்கு அமுல்



மணிப்பூரில் பதற்றமான சூழல் நிலவி வருவதால், பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ரோந்து பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மணிப்பூர் - ஜிரிபாம் மாவட்டத்தில், திங்கட்கிழமை(11), பாதுகாப்புப் படையினருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் கிளர்ச்சியாளர்கள் என சந்தேகிக்கப்படும் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த குகி-ஜோ கவுன்சில், செவ்வாய்க்கிழமை (12) அதிகாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தது. இதையடுத்து, கடைகள் அடைக்கப்பட்டு மாநிலத்தின் பல பகுதிகளிலும் சாலைகள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

இதனிடையே, 11 பேர் கொல்லப்பட்டதற்கு எதிராக, திங்கட்கிழமை (11) மாலை, இம்பால் மேற்கு மற்றும் இம்பால் கிழக்கு மாவட்டங்களில் பல்வேறு கிராமங்களில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்பால் பள்ளத்தாக்கின் பல பகுதிகளில் மோதலில் ஈடுபடும் இரு தரப்பிலிருந்தும் ஆயுதம் ஏந்திய குழுக்கள் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். இதன் காரணமாக மாநிலத்தின் பல பகுதிகளில், ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், கலவரம் ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் கூடுதல் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. அத்துடன், கிளர்ச்சியாளர்களால் கடத்தப்பட்டுக் காணாமல் போனவர்களைக் கண்டறியும் பணிகளையும் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். பாதுகாப்புப் படை வீரர்கள் நடத்திய என்கவுண்ட்டரில் 11 கிளர்ச்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த மோதலில், சி.ஆர்.பி.எப். வீரர்கள் இருவர் காயமடைந்தனர்.

இது குறித்துக் கூறிய பொலிஸார், “ஜிரிபாம் காவல் நிலையத்துக்கு அருகே அகதிகள் முகாம் உள்ளது. பொலிஸ் நிலையம் மற்றும் அகதிகள் முகாமை குறிவைத்து கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். அவர்களது தாக்குதல் முறியடிக்கப்பட்டது. கடந்த சில வாரங்களாகத் கிளர்ச்சியாளர்களை வேட்டையாடும் பணி தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. கடந்த 3 நாட்களில் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன” என தெரிவித்தனர்.

கர்நாடகா

கர்நாடக சட்டசபை தேர்தல்

## இன்று ஆரம்பம்; 23இல் முடிவு




ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள 81 சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் இன்று புதன்கிழமை (13) மற்றும் நவம்பர் 20ஆம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

கர்நாடக சட்டசபையில் சென்னபட்டணா, சிக்காவி, சண்டூர் ஆகிய 3 தொகுதிகள் காலியாக உள்ளன. இந்த 3 தொகுதிகளுக்குமே இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

3 தொகுதிகளிலும், 45 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மேலும், ஏழு இலட்சத்து 4 ஆயிரத்து 673 வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக 557 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் எதிர்வரும் 23ஆம் திகதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.



# இலங்கையை வீழ்த்துமா நியூசிலாந்து?

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது தம்புள்ளயில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

கேன் வில்லியம்சன், டொம் லேதம், டரைல் மிற்செல், டெவோன் கொன்வே, றஷின் றவீந்திர ஆகியோர் இல்லாத நிலையில் ஹென்றி நிக்கொல்ஸ், வில் யங், மார்க் சப்மன், மிஷெல் பிறேஸ்வெல் ஆகியோருக்கும் இளம்வீரர்கள் டிம் றொபின்சன், டீன் பொக்ஸ்கறொப்ட், ஸகாரி போக்கிஸ், ஜொஷ் கிளார்க்சன், மிற்செல் ஹே, நாதன் ஸ்மித் தம்மை வெளிக்காடுவதற்கான வாய்ப்பாக இத்தொடர் அமைகிறது.

மறுபுறமாக நிஷான் மதுஷ்க தொடர்ந்து சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துகையில் அவிஷ்க் பெர்ணாண்டோ தொடர்ச்சியான சிறப்பான பெறுபேறுகளை வெளிக்காட்ட வேண்டியுள்ளது. குசல் பெரேராவும் குழாமில் காணப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தவிர மொஹமட் ஷிராஸ், டில்ஷான் மதுஷங்க ஆகியோரும் வாய்ப்பைக் கிடைத்தால் தம்மை நிரூபிக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

காயத்தால் பெர்கியூசன் இல்லை

## அடம் மில்னுக்கு அழைப்பு



இலங்கைக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் கெண்டைக்கால் பின்தசையில் காயமடைந்த நியூசிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் லொக்கி பெர்கியூசன் நியூசிலாந்துக்கு திரும்பவுள்ளார்.

அந்தவகையில், ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் 33 வயதான பெர்கியூசன் விளையாடமாட்டார்.


இந்நிலையில், பெர்கியூசனின் பிரதியீடாக அடம் மில்ன் குழாமுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

## யமால், லெவன்டோஸ்கி தவற விடுகின்றனர்

காயமடைந்ததைத் தொடர்ந்து ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவின் முன்களவீரர்களான றொபேர்ட் லெவன்டோஸ்கியும், லமீன் யமாலும் போலந்து, ஸ்பெய்னுக்கான சர்வதேசப் போட்டிகளைத் தவற விடுவதாக பார்சிலோனா திங்கட்கிழமை(12) தெரிவித்துள்ளது. கணுக்கால் காயம் காரணமாக மூன்று வாரங்கள் வரையில் யமால் விளையாட மாட்டார் எனக் கூறப்படுவதுடன், முதுகுப் பகுதி உபாதை காரணமாக இரண்டு வாரங்கள் வரையில் லெவன்டோஸ்கி விளையாட மாட்டார் எனக் குறிப்பிடப்படுகிறது.



# தொடரைக் கைப்பற்றியது ஆப்கானிஸ்தான்




பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஆப்கானிஸ்தானும், இரண்டாவது போட்டியை பங்களாதேஷும் வென்ற நிலையில் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷாஜாவில் திங்கட்கிழமை (12) நடைபெற்ற தீர்மானமிக்க மூன்றாவது போட்டியில் வென்றதன் மூலமே 2-1 என்ற ரீதியில் தொடரை ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 244/8 (50 ஓவ.) (துடுப்பாட்டம்: மஹ்முதுல்லாஹ் 98 (98), மெஹிடி ஹஸன் மிராஸ் 66 (119) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 4/37, மொஹமட் நபி 1/37, ரஷீட் கான் 1/40)

ஆப்கானிஸ்தான்: 246/5 (48.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 101 (120), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் ஆ.இ 70 (77), மொஹமட் நபி ஆ.இ 34 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: நஹிட் ரானா 2/40, முஸ்தபிசூர் ரஹ்மான் 2/50, மெஹிடி ஹஸன் மிராஸ் 1/56)

போட்டியின் நாயகன்: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய்

தொடரின் நாயகன்: மொஹமட் நபி.

# காயமடைந்த ஷன்டோ, முஷ்பிக்கூர் இல்லை



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரிலிருந்து அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, முஷ்பிக்கூர் ரஹீம் ஆகியோர் விலகியுள்ளனர்.

முஷ்பிக்கூருக்கு விரலில் காயமென்பதுடன், ஷன்டோவுக்கு அடிவயிற்றுப் பகுதியில் காயமென்பது குறிப்பிடத்தக்கது.

ஷன்டோவுக்குப் பதிலாக அணித்தலைவராக மெஹிடி ஹஸன் மிராஸ் கடமையாற்றவுள்ளார்.

குழாம்: மெஹிடி ஹஸன் மிராஸ் (அணித்தலைவர்), ஷட்மன் இஸ்லம், மஹ்முடுல் ஹஸன் ஜோய், ஸகிர் ஹஸன், மொமினுல் ஹக், மஹிடுல் இஸ்லாம் அங்கொன், லிட்டன் தாஸ் (விக்கெட் காப்பாளர்), ஜாகிர் அலி, தஜியுல் இஸ்லாம், ஷொரிஃபுல் இஸ்லாம், தஸ்கின் அஹ்மட், ஹஸன் மஹ்மூட், நஹிட் ரானா, ஹஸன் முராட்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 13 நவம்பர் 2024, இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.